சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.2/2010

பெயர் திரு. இளங்கோ நாள். 01.07.2026
த/பெ. பெருமாள்

**<u>3, 5, 9 மற்றும் 10 பிரதிவாதிகள் சாட்சி 1 (DW2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

( வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**<u>3, 5, 9 மற்றும் 10 பிரதிவாதிகள் சாட்சி 1 (DW2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் பாட்டனர் பெயர் இலட்சுமணன் என்று சொன்னால் சரிதான். இலட்சுமணனுக்கு விவசாய நிலம் இருந்த விவரம் எனக்கு தெரியாது. இலட்சுமணனுக்கு பூர்வீகமாக சொத்துகள் கிடைக்கப்பெற்று அதன் மூலமாகதான் வழக்கு சொத்துகள் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கு கிராமத்தின் புல எண் 42/2 ல் 1 ஏக்கர் 9 சென்ட்டும், புல எண் 41/2 ல் 56 சென்ட்டும் எங்களுக்கு பூர்வீகமாக கிடைத்தது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட இரு புல எண்களில் கண்ட சொத்துகளை விற்று வழக்கு சொத்துகள் வாங்கப்பட்டன என்று சொன்னால் சரிதான். அதனால் தான், **வா.த.சா.ஆ 7** ல் பாகபிரிவினை ஆவணத்தில் முன்னோர்வழி சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலும் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மற்றும் சகோதரர்கள் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான்.

2) அவ்வாறு கூட்டுகுடும்பமாக இருக்கும்போது 1ம் வாதி 1972 லும், 2 ம் வாதி 1974 லும் பிறந்தார்கள் என்றால் சரிதான். 3 ம் வாதி 1977 ல் பிறந்தார் என்றால் எனக்கு

தெரியாது. என் தகப்பனார் இறப்பதற்கு முன்பே 1 முதல் 5 வாதிகள் பிறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்து 4 ஆண்டுகள் கழித்து 1998 ல் வா.த.சா.ஆ 7 படி பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். அதற்கு முன்பே புலஎண் 15/3 ல் நாங்கள் வீடு கட்டி குடியிருந்து வந்தோம் என்றால் குப்புசாமி தான் அங்கு இருந்தார். நாங்கள் கூட்டுகுடும்பமாக எங்கே இருந்தோம் என்றால் 2 ம் பிரதிவாதி குப்புசாமி 1970 வருடத்தில் தனியாக சென்றுவிட்டார். **வா.த.சா.ஆ 7** ல் எனக்கு **சி** அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது. 2 ம் பிரதிவாதிக்கு **ஏ** அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். **பி** அட்டவணை சொத்து குணசேகரனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) வா.த.சா.ஆ 7 பிறகு குப்புசாமி தன் மனைவி மக்களுடன் கூட்டுக்குடும்பமாக இருந்தார் என்றால் சரிதான். 1 முதல் 5 வாதிகளுக்கு 1998 முதல் 2008 க்குள் திருமணம் ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. 5 ம் வாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்பது ஞாபகம் இல்லை. 2 ம் பிரதிவாதிக்கு 1 முதல் 5 வாதிகளை தவிர ஆண் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். அதனால் 2 ம் பிரதிவாதியிடம் அவரின் சொத்துகளை கிரையப்பெற நான் பேசினேன் என்றால் இல்லை. அவ்வாறு கிரயப்பெற நான் 2 ம் பிரதிவாதிக்கு அழுத்தம் கொடுத்தேன் என்றாலும், அதனால் 2 ம் பிரதிவாதி தன்மகள்களை கேட்டுக் கூறுவதாக கூறினார் என்று சொன்னாலும் சரியல்ல.

4) 2 ம் பிரதிவாதியின் மகள்கள் அவ்வாறு விற்கக்கூடாது என்று கூறினார்கள் என்றாலும், நான் விற்க அழுத்தம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கும், அவரின் மனைவி மற்றும் மக்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதனால் தான் 2 ம் பிரதிவாதி வழக்கு கிராமத்திலும், அவரின் மனைவி மற்றும் மக்கள் சோத்துப்பாக்கத்திலும் தனித்தனியே வாழந்துவந்தனர் என்றால் சரியல்ல.

அக்காலகட்டத்தில் 2ம் பிரதிவாதி தனிமையில் இருந்ததை பயன்படுத்தி, அவருக்கு மது அதிகமாக கொடுத்து என் கட்டுப்பாட்டில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. 2019 ல் 2ம் பிரதிவாதிக்கு நானும் என் சகோதரரும் அழுத்தம் கொடுத்து 1முதல் 5 வாதிகளுக்கு தெரியாமல் வா.த.சா.ஆ.8 மூலம் மதியழகனுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5) வா.த.சா.ஆ.8ல் நானும் சேர்ந்து கிரயம்கொடுத்தேன் என்றால் என்னுடைய சொத்தை கிரயம் கொடுத்தேன். வா.த.சா.ஆ.8 படி என் பாகத்தை நானும், 2மற்றும் 3 பிரதிவாதிகள் அவரவர் பாகத்தை விற்றுள்ளார். வா.த.சா.ஆ.8 கீழ் எவ்வளவு கிரயத்தொகை பெறப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ 8 ல் நான், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தனித்தனியே எவ்வளவு கிரய தொகைப் பெற்றோம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 5ம் வாதிக்கு 2008 ல் திருமணம் ஆனது என்றாலும், அதனால் 2009ல் வா.த.சா.ஆ.8. ல் 5ம் வாதியின் திருமணத்திற்காக கிரயம் கொடுத்ததாக கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 ன் கீழ் நிலத்திற்காக மட்டும் நான் கிரயத்தொகை பெற்றேன். 4ம் பிரதிவாதி என் சகோதரி. வீரம்மாள் என் தாயார். வா.த.சா.ஆ.8ல் 4ம் பிரதிவாதியும், என் தாயாரும் தரப்பினர்கள் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.8ல் 4ம் பிரதிவாதியும் என் தாயாரும் குடும்ப செலவிற்காக நாங்கள் விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வா.த.சா.ஆ 8ல் கண்ட கிரயதொகை 2ம் பிரதிவாதியால் தன் மகள்களுக்கு செலவிடப்படவில்லை என்பதால், வா.த.சா.ஆ 8 கிரயம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.9 ன் கீழ் நான், குப்புசாமி, என் தாயார் மற்றும் என் சகோதரி ஆகியோர் புலஎண் 15/3ஏ மற்றும் 28/7 ஆகிய சொத்துகளை 6ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்கண்ட புல எண்கள் வா.த.சா.ஆ.7ல் பாகபிரிவினையில் என்

பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் ஏன் வா.த.சா.ஆ 9ல் நானும், என் தாயார் மற்றும் என் சகோதரி ஆகியோர் தரப்பினராக சேர்க்கப்பட்டோம் என்றால் எங்கள் பாகத்தை விற்க்கும்போது 2ம் பிரதிவாதி கையொப்பம் செய்ததால் அவர் பாகத்தை விற்க்கும்போது நாங்கள் கையொப்பம் செய்தேன். வா.த.சா.ஆ.9ல் நான் சென்னையில் வீடு வாங்குவதற்கு விற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் பாகத்தை ஏமாற்றுவதற்கு வா.த.சா.ஆ 9ல் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் மனைவி 8ம் பிரதிவாதி தான் உயிருடன் இருந்தக்காலத்தில் எவ்வித பணியும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

7) அவருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.10 ல் குப்புசாமி எனக்கு அளித்த பொது அதிகாரத்தை வைத்து என் மனைவிக்கு நான் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்று சொன்னால் சரிதான். குப்புசாமியிடம் இருந்து பொது அதிகார ஆவணத்தை சென்னை பெரியமேடு பதிவு அலுவலகத்தில் வைத்து பெற்றேன். சொத்துகள் செய்யூர் பதிவு மாவட்ட ஆள்வரைக்குள் வரும்போது ஏன் சென்னையில் பதிவு செய்யப்பட்டது என்றால் 2ம் பிரதிவாதியை அவரது மனைவி மற்றும் மக்கள் அடித்து காயம்படுத்தியதற்காக சென்னையில் மூன்று மாதம் சிகிச்சை பெற்ற காலத்தில் எழுதிக்கொடுத்தார். அந்த மூன்றுமாத காலத்தை நான் பயன்படுத்தி 2ம் பிரதிவாதிக்கு மது ஊற்றி கொடுத்து பொது அதிகாரஆவணத்தை என் பெயரில் எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல.

8) நான் தற்கொலை செய்துகொள்வேன் என்று மிரட்டி பொது அதிகார ஆவணத்தை என் பெயருக்கு எழுதிக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் 3ம் நபருக்கு விற்பனை செய்ய என்று எழுதப்படவில்லை. என் மனைவிக்கு

கிரையம் கொடுக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்படவில்லை. பொதுஅதிகார ஆவணம் 27.07.2009 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். என் மனைவிக்கு 15.10.2010 ல் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த குறுகிய காலத்தில் நேரடியாக நான் கிரையம் பெற்றிருக்கலாம் என்றாலும 2ம் பிரதிவாதி ஏமாற்றி பொதுஅதிகார ஆவணம் பெற்றேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு அந்த கிரையத்தை ரூபாய் மூன்று இலட்சத்திற்கு கொடுத்தேன். அந்த மூன்று இலட்சம் 2ம் பிரதிவாதியிடம் கொடுத்தற்காக கிரைய ரசீது வாங்கவில்லை. அந்த தொகையை பொதுஅதிகார ஆவணம் எழுதிய தேதியில் என் மனைவியிடம் இருந்து பெற்றுக்கொடுத்தேன்.

9) வா.த.சா.ஆ.10 ல் கண்ட கிரைய தொகைக்கும் நான் கூறும் கிரையத்தொகைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் 1995 ம் வருடம் 2 ம் பிரதிவாதி என்சொத்தில் கரும்பு பயிரிட்டு லாபம் ஈட்டியதால், ரூ.65,000/– தர வேண்டியதை அதில் ஈடுசெய்தேன். வா.த.சா.ஆ.10 யை ரத்து செய்ய மாவட்ட கண்காணிப்பாளரிடம் என்மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் என்னையும் வாதிகளையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதில் காவல் அலுவலகத்தில் இவ்வழக்கை காண்பித்து அதில் முடியும் வரை மேல்நடவடிக்கை எடுக்கமாட்டேன் என்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்கண்டவாறு நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் வா.த.சா.ஆ.10 யை ரத்து செய்யக் கூறி மாவட்ட பதிவாளரிடம் மனு அளித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் கலந்து கொண்டு நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் மாவட்ட பதிவாளர் 25.05.2023 ல் உத்தரவு பிறப்பித்தார் என்றால் எனக்கு அந்த உத்தரவு எனக்கு சார்பு செய்யப்படவில்லை.

10) அந்த விசாரணையில் 2ம் பிரதிவாதியிடம் சிறுகச்சிறுக தொகை கொடுத்தும் தன் மகளின் திருமணச் செலவிற்காகவும் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி அந்த மாவட்ட பதிவாளர் உத்தரவை வாங்கிப் படித்துவிட்டு அவ்வாறு கூறியது சரிதான் என்று கூறுகிறார். மு.வ. 89/2013 வழக்கில் என்னுடைய முதல் விசாரணையில் 1995ம் வருடம் 65டன் கரும்பை ரூ.1000/– வீதம் வெட்டி ரூ.65,000/– கான கரும்பை விற்பனை செய்து என்னிடத்தில் கொடுப்பதாக கூறி 2ம் பிரதிவாதி குப்புசாமி என்னை ஏமாற்றிவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்கு குறுக்கு விசாரணையில் குப்புசாமியின் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மு.வ. 89/2013 வழக்கில் இவ்வழக்கு வாதிகள் தரப்பினர்கள் அல்ல என்று சொன்னால் சரிதான். என் மனைவி இவ்வழக்கு வாதிகள் மீது மு.வ.63/2012 எனும் வழக்கை தாக்கல் செய்தார். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளைக் கோரி தாக்கல் செய்த வழக்கு செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

11) வழக்கு சொத்துகள் வாதிகளின் பூர்வீக சொத்துகள் என்றாலும் அதில் வாதிகளுக்கு தலா 6ல் 1 பாகம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் பாகத்தை ஏமாற்ற நானும் என் சகோதரரும் சேர்ந்து வா.த.சா.ஆ 8 மற்றும் 9 ஆவணத்தை புனைந்துள்ளோம் என்றாலும், அவை ரத்து செய்யப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதியை ஏமாற்றி பொது அதிகாரம் பெற்று வா.த.சா.ஆ.10 யை என் மனைவி பெயருக்கு ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

12) 1995 ம் வருடம் கரும்பு கடன் ஏற்பட்டுயிருந்தால் 1998 பாகப்பிரிவினையில் அது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் அது கடன் அல்ல என் கரும்பு அறுவடையை 2ம் பிரதிவாதி பெயரில் பதிந்து தொகை தருவதாக கூறியதாகும். நான் அனைத்து ஆவணங்களில் கடன் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் கூறியவாறு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.